## தலைப்பு 022 – நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 022 - நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துக்களை தெரிவித்தல் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கலாக உரிய வருடாந்த பொழிப்பறிக்கை 2023 மே 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துக்களை தெரிவித்தல் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கலாக அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணையாளர் அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பின்வரும் கணக்காய்வு அவதானிப்புகளின் பிரகாரம் கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுகளுடன் இணங்கியிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பந்திக்கான தொடர்பு |
|---|---|
| திறைசேரிக்கான தேறிய சொத்துக்கள் | 1.6.1 (அ) |

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

### (அ) திறைசேரிக்கான தேறிய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த வருடத்தின் கணக்காய்வுக்குட்படுத்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் திறைசேரிக்கான தேறிய சொத்துக்கள் ரூபா 3,436,555 ஆன போதிலும், மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 3,463,555 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான மீதியானது ரூபா 3,436,555 ஆவதுடன், 2022 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது எழுத்துமூல வழுவொன்றாக அது ரூபா 3,463,555 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. | கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுக்களின் பெறுமதிகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சரியாக காண்பிக்கப்பட வேண்டும். |

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான திறைசேரியின் கணினி அச்சீட்டு பதிவுகள் பிரகாரம், அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் கடன் மீதி ரூபா 3,328,909 ஆக காணப்பட்டதுடன், அத்திகதியில் உள்ளபடியான தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 3,292,152 ஆனமையால் ரூபா 36,757 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. இந்த வேறுபாட்டினை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வேறுபாட்டை சரி செய்ய தேவையான தரவு மற்றும் தகவல்கள் இல்லாததால், இதை இதுவரை சரி செய்ய முடியவில்லை. | வேறுபாட்டை தீர்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம், மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிராமையால், மீளாய்வாண்டுக்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 06 மீண்டெழும் செலவின விடயங்களிலிருந்து ரூபா 652,060 ஆன நிதியேற்பாடு வேறு 05 மீண்டெழும் செலவின விடயங்களுக்கு நி.பி. 66 இன் ஊடாக மாற்றப்பட்டிருந்தது. இவற்றுள் ஒரு செலவின விடயத்திற்காக நி.பி.66 இன் கீழ் ரூபா 325,000 மாற்றப்பட்டிருந்ததுடன், அதன் நிதியேற்பாட்டிலான | வருடத்தில் ஏற்பட்ட எதிர்பாராத அத்தியாவசியச் செலவுகளைச் சுமக்க, சம்பந்தப்பட்ட செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு போதுமானதாக இல்லாததால், மீதமுள்ள செலவினப் விடயங்களில் இருந்து ஒதுக்கீடுகளை மாற்ற வேண்டியதாயிற்று. அரச செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக தேசிய வரவு செலவுத் திட்டதிணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி, பல | நிதிபிரமாணத்தின் பிரகாரம் துல்லியமான மதிப்பீடுகளைத் தயாரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேமிப்பு ரூபா 718,750 ஆக காணப்பட்டது. | செலவின விடயங்களின் நிதியேற்பாடு எஞ்சியுள்ளது. | |
| (ஆ) | 05 செலவின விடயங்களின் நிதியேற்பாட்டிலான சேமிப்பு 8 சதவீதம் முதல் 88 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் நிலவியமை மற்றும் அதற்கான காரணமாக குறிப்பிடப்பட்டிருந்த ‘‘மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் போதுமானதாக காணப்படல், என்பதன் மூலம் நிறுவனம் அந்த செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தேசிய வரவு செலவுத் திட்டதிணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் படி செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் ஆண்டினுள் எதிர்பார்த்த செலவினங்கள் ஏற்படாமை ஆகியவையே இந்த செலவின விடயங்களின் சேமிப்பு தொடர்பில் தாக்கம் செலுத்தியுள்ளது. | செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீரமானங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | | | | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரைகள** |
|---|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | | **பெறுமதி** | **இணக்கமின்மைகள்** | | . |
| | | **ரூபா** | | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 137 மற்றும் 201 | 20,444 | சம்பள உறுதிச்சீட்டுகள் அங்கீகரிக்கப்படாது அனுப்பப்பட்டிருந்தன. | தவறுதலாக அந்த உறுதிச்சீட்டுக்களில் கையொப்பம் இடப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட உறுதிச்சீட்டுகளுக்கு மாத்திரம் கொடுப்பனவு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | மேற்கொள்ள வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 139(5), 264 மற்றும் 267(1) | 23,197 | இரு உறுதிச்சீட்டுகளுக்காக பணம் பெற்றுக்கொள்ளப்பட்டதற்காக சான்றுபடுத்தல் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், சம்பள குறிப்பு அட்டையொன்றில் சம்பளத்தை வருமானத்திற்கு செலுத்தியமைக்கான சான்றுபடுத்தல் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக 09 ஆம் இலக்க உறுதிச்சீட்டில் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டதற்கான சான்றுபடுத்தல் கையொப்பம் இடப்பட்டிராததுடன், 12 ஆம் இலக்க உறுதிச்சீட்டு பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான கையொப்பம் இடப்பட்டிராததுடன், குறித்த கோரிக்கை கடிதத்தில் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டதாக கையொப்பம் இடப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பணம் கிடைத்தமைக்கான சான்றுபடுத்தலொன்று பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 232(2) | 11,292,266 | 12 உறுதிச்சீட்டுக்களின் செலுத்தப்பட்ட தொகை எழுத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மாதாந்த ஆளணி வேதன பட்டியல்களில் செலுத்திய தொகை எழுத்தில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உறுதிச்சீட்டுகளில் செலுத்தப்பட்ட தொகை எழுத்தில் குறிப்பிடப்பட வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 262(2) | 10,315,989 | செலுத்தப்பட்ட 11 உறுதிச்சீட்டுக்களின் ‘‘செலுத்தப்பட்டது’’ எனும் முத்திரை வைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஆளனி வேதனப் பட்டியலில் ‘‘செலுத்தப்பட்டது’’ எனும் முத்திரை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செலுத்தப்பட்ட உறுதிச்சீட்டுகளுக்காக ‘‘செலுத்தப்பட்டது’’ எனும் முத்திரை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதியளவில் விசாரணைகளை நடாத்துவதற்கு மற்றும் அறிக்கையிடுவதற்குள்ள கடந்த வருடத்தின் எஞ்சியிருந்த 928 முறைப்பாடுகளும், மீளாய்வாண்டின் போது நிறுவனத்திற்கு கிடைத்த 1,246 முறைப்பாடுகளுமாக ஆண்டினுள் விசாரணை மேற்கொள்ளவிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,174 ஆகும். அதனுள் ஆண்டினுள் 1,475 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் உள்ளபடியாக 699 முறைப்பாடுகுள் விசாரணை மேற்கொள்வதற்கு மற்றும் அறிக்கையிடுவதற்கு தொடர்ந்தும் எஞ்சியிருந்தது. | தரப்பட்டுள்ள தொகைகள் சரியானது ஆகும். | முறைப்பாடுகளை துரிதமாக விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 04. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 32 ஆக காணப்பட்டதுடன், உள்ளபடியான பதவியணி 20 ஆனமையால் வெற்றிடமான பதவியணி 12 அல்லது, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 37 சதவீதம் ஆகும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொது நிர்வாக அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | செயலாற்றலுக்கு பாதகமான முறையில் தாக்கம் செலுத்தும் அத்தியாவசியமான பதவிகயில் வெற்றிடங்கள் நிலவினால் அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |